Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 17-ஆம் நாள் ஷவ்வால் 14 (29-2-64) சனிக்கிழமை இதழ் 19

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறமான
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாண ஏஜண்ட்
எம். பரராசசிங்கம்
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

வேலைநிறுத்தம் பரவுகிறது

காலி, குருநாகலிலும் டாக்டர்கள் வெளியேறினர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்தியநிபுணர்களுடன் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர்களும் வேலைநிறுத்தம் செய்துள்ளனர், வைத்தியநிபுணர்களின் வேலைநிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் டாக்டர்களின் வேலைநிறுத்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு, காலி, குருநாகல், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மட்டும் இப்பொழுது டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். நாளை இதரபகுதிகளில் உள்ள டாக்டர்களும் வேலைநிறுத்தம்செய்யலாமென எதிர்பாக்கப்படுகிறது.

வைத்தியநிபுணர்கள் சங்கத்துக்கும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்குமிடையில் பிளவு ஏற்படுத்த சுகாதார அமைச்சு முயற்சிசெய்வதாக இரண்டு சங்கங்களும் குற்றம் சாட்டியுள்ளன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 50 டாக்டர்கள் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சுமார் 50 டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ள போதிலும் அவசியமான சத்திரசிகிச்சைகள் நடைபெற்றன. அவசிய சேவைகளுக்கென இரு நிபுணர்கள் கடமையாற்றுவதற்கு வைத்தியநிபுணர் சங்கம் அனுமதியளித்துள்ளது.

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றி வரும் வைத்திய நிபுணர்களும் வைத்தியர்களும் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர். இதனால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்த நோயாளர் பலர் பெரிதும் அவதிக்குள்ளாகினர். சிகிச்சை பெற வந்த நோயாளர் பலர் திரும்பிச் சென்றனர். குறிப்பாக கண் நோயாளர் எல்லோரும் வீடு செல்லவேண்டி நேரிட்டது.

நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவசிய சத்திர சிகிச்சைகள் நடைபெற்றன என அறியப்படுகிறது. பிரசவத் தாய்மார்கள் பலர் வைத்தியநிபுணர்கள் இல்லாத காரணத்தினால் தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றார்கள். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சிலர் நிலைமையை உத்தேசித்து துண்டு வெட்டிக் கொண்டு வேறு தனிப்பட்ட ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவும் அறியப்படுகிறது.

வைத்தியநிபுணர்கள் வேலை

(6-ம் பக்கம் பார்க்க)

"நாட்டுநலன் கருதி வேலைக்குத் திரும்புக"

வைத்திய நிபுணர்களுக்கு சுகாதார மந்திரி கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

சொந்த நலனைக் கைவிட்டு நாட்டு நலன் கருதி மிகவிரைவில் வேலைக்குத் திரும்புமாறு சுகாதார மந்திரி வேலைநிறுத்தம் செய்யும் நிபுணர்களையும் வைத்தியர்களையும் அறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

திரு. மஃறூப் தமது அறிக்கையில் 1957-ம் ஆண்டு தொடக்கம் 1962-ம் ஆண்டு வரையும் தனிப்பட்ட தொழில் நடத்துவது பற்றி எழுந்த பிரச்னைகள் பற்றியும், மாறுதல்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளார். 1957-ம் ஆண்டில் அரசாங்க வைத்தியர் சங்கம் தனிப்பட்ட தொழில் முறையை நிறுத்த உடன்பட்டதாகவும் அப்பொழுது அச்சங்கத்திலேயே வைத்திய நிபுணர்களும் அங்கத்தவர்களாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்களையும், வைத்தியர்களையும் வேலைக்குத் திரும்புமாறு சுகாதார மந்திரி அந்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

"சோஷலிஸத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் ஒரு நாட்டில் நாட்டு மக்களுக்குத் தேவையான இலவச சிகிச்சை அளிக்கவேண்டியது அரசாங்கத்தினதும், அரசாங்க ஊழியர்களினதும் அவசியமான கடமையாகும்.

அரசாங்க வைத்தியர்களும், வைத்திய நிபுணர்களும் தனிப்பட்ட தொழில் நடத்துவதை மக்கள் விரும்பவில்லை என்பதை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. இதன் காரணமாகவே அவ்வித தொழிலைத் தடைசெய்யும் தீர்மானத்தை மந்திரி சபையிடம் சமர்ப்பித்தேன். மந்திரிசபையில் இது நிறைவேற்றப்பட்டு இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து தனிப்பட்டதொழிலை நிறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது. காலஞ்சென்ற பிரதமரும் அரசாங்க வைத்தியர்களின் தனிப்பட்ட தொழிலை நிறுத்துவதென முடிவுசெய்திருந்தார். தனிப்பட்டமுறையில் தொழில் நடத்துவதைத் தடைசெய்ய வேண்டுமென்பதை பார்லிமெண்டும் ஒப்புக்கொண்டுள்ளது" என்று சுகாதார மந்திரி தெரிவித்தார்.

இந்திய — சீன தகராறு

பேச்சுவார்த்தையில் முன்னேற்றமில்லை

சூ-என்-லாயின் பிடிவாதமே காரணமாம்

கொழும்பு, வெள்ளி

சீன-இந்திய எல்லைத்தகராற்றை தீர்ப்பதற்கான திட்டவட்டமான முடிவு எதுவும் இலங்கை சீன பிரதமர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்படவில்லை யென்றும் சீனப் பிரதமரின் விட்டுக்கொடாத மனப்பான்மையே இதற்கு காரணமாக இருப்பதாகவும் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

சீனப் பிரதமர் சூ-என்-லாய்க்கும், இலங்கைப் பிரதமர் சிறிமாவுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சுமுகமான நிலைக்கு வராததையிட்டு இலங்கை அதிகாரிகள் கவலைகொண்டிருப்பதாகவும் நாளை புறப்படும் சீனப் பிரதமர் கடைசி நேரத்தில் ஏதாவது ஒரு தீர்மானத்திற்கு வந்தாலொழிய, நிலைமை சமாளிக்க முடியாமல் இப்படியே இருந்து வருமெனவும் தெரியவருகிறது.

கொழும்பு வெள்ளி,

சீனப்பிரதமர் சூ என்-லாயும் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவும் இன்று காலை இரண்டாவது தடவையாகச் சந்தித்துப் பேசினர். இன்றைய பேச்சுவார்த்தைகளின் போது நிதிமந்திரி டி. பி இலங்கரத்னவும் கைத்தொழில்வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகாவும் கலந்து கொண்டனர்.

இன்றைய பேச்சு வார்த்தைகளில் இலங்கை-சீன வர்த்தக உறவுத்தான முக்கிய இடம் பெற்றதாக அறியப்படுகிறது. இலங்கையிடமிருந்து மேலும் அதிக ரப்பர் வாங்குவதற்கு சீனப்பிரதமர் கோஷ்டி விருப்பம் தெரிவித்ததாகவும் சீனாவிடமிருந்து அரிசி, துணி வாங்குவது பற்றி இலங்கை தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

இந்திய-சீன எல்லைத் தகராறுக்குச் சுமுகமான தீர்வு காண்பதற்கு நேற்றைய பேச்சுவார்த்தைகளில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தெரிவித்த யோசனை யொன்றை, தமது அரசாங்கத்தின் கருத்தை அறிந்துதான் முடிவு சொல்ல முடியும் என சீனப்பிரதமர் கூறியதாக அறியப்படுகிறது.

லடாக் பகுதியில் ஏழுநிலைகளிலிருந்து சீனத்துருப்புக்களை வாபஸ் பெறவேண்டுமென்பது தான் இலங்கைப் பிரதமர் தெரிவித்த யோசனையென்று தெரிகிறது. ஏழுநிலை

(5-ம் பக்கம் பார்க்க)

கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில் சுவீப்பின் 3[illegible]-வது சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது. பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு
08 T 0683 — ரூ. 18,000
இரண்டாவது பரிசு
02 Z 0433 — ரூ. 8,000
மூன்றாவது பரிசு
02 H 0300 — ரூ 4,000

(6-ம் பக்கம் பார்க்க)

8 கோடி ரூபா உதவி

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு எட்டுக்கோடி ரூபாபெறுமதியளவிற்கு உதவியளித்து தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடியை நீக்க சூ-என் லாய் சம்மதித்துள்ளார் இத்தொகையில் இரண்டுகோடி ரூபா பெறுமதியான ஜவுளி தினிசுகளை அனுப்பிவைப்பதற்கு அவர் சம்மதித்துள்ளார்.

காலஞ்சென்ற பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபம் அமைப்பதற்கும் நிதியுதவியளிக்க சூ-என்-லாய் வாக்குறுதியளித்துள்ளார்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்.
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

பொன்வாக்கு

நாம் புனித மனிதராவ தெப்படி? சூரியன் எப்போதும் ஒளி வீசுவது போல கடவுளும் நம்முள்ளிருந்து எப்போதும் பேசிக் கொண்டிருக்கின்றார். அதை எப்படி எப்போது கேட்பது? அதிகாலையில் மனம் மற்ற வேலைகளால் குழையாதிருக்கையில் அவர் கூறுவதை நிதானமாகக்கேட்டு எழுதிக் கொண்டு அதன்படி ஒழுக வேண்டும்.

— பிரிகிராட்ரி

ஈழநாடு
EELA NADU
EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 387

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
மாசி 17 ம் உ (29-2-64)

வேலைநிறுத்தம்

நேற்று முன்தினம் ஆரம்பமான வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சூழ்நிலை இதுவரை ஏற்படவில்லை. இதற்குமாறாக பல டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டதால் நிலைமை மோசமாகியுள்ளது.

வைத்தியநிபுணர்களினதும் டாக்டர்களினதும் வேலைநிறுத்தம் ஒருபுறமிருக்க தந்தி,டெலிபோன் இலாகாவிலும் "தாமதித்து வேலை செய்யும்" வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளது. "நடமாடும் தபால் சேவை"யிலுள்ள கனிஷ்ட ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். கொழும்புத் துறைமுகத்திலும் வேலைநிறுத்தம் நீடித்து வருகின்றது. இந்நிலை பொதுமக்களுக்குப் பெருங்கவலை அளிப்பதாகும்.

இலங்கையில் சமீபகாலமாக வேலைநிறுத்தம் ஒரு தொற்று நோய்போல் பரவி வருகிறது. இது நாட்டுக்கும் வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கும்கூட நிச்சயம் நன்மையளிக்காது. தங்களுக்குள்ள குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு வேறுமார்க்கமே இல்லையா? வேலைநிறுத்தம் என்பது இறுதி ஆயுதம். அதைத் தொட்டதற்கெல்லாம் உபயோகிப்பது அதன் சக்தியையே குறைத்துவிடும். எந்த வேலைநிறுத்தமும் பொதுமக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றால் தான் வெற்றிபெற முடியும்.

இப்பொழுது வேலைநிறுத்தம் செய்துள்ள வைத்திய நிபுணர்களும், தபால், தந்தி ஊழியர்களும் தங்களுக்குள்ள குறைகளைத் தெரிவித்துள்ளனர். அவர்களுக்குக் குறைகள் இருப்பது உண்மைதான். ஆனால் அவர்களுடைய குறைகளைவிட பொதுமக்களுக்கு உள்ள குறைகள் அதிகம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை; பிள்ளைகள் படிக்க வழியில்லை வாழ்க்கைச்செலவு விஷம்போல் அதிகரித்துள்ளது. "என்ன செய்யலாம்?" என்று சாதாரண பொதுமக்கள் ஒவ்வொருவரும் ஏக்கத்துடன் கேட்கின்றனர். இச்சமயத்தில் பொதுமக்களின் பணத்தில் படித்து பொதுமக்களின் பணத்தில் பெருந்தொகையான பணத்தை ஊதியமாகப் பெற்றுவரும் வைத்தியநிபுணர்களும் இப்பொழுது சம்பளமும் பிற்காலத்தில் 'பென்ஷனும்' பெறும் அரசாங்க ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்வது பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் பெருந்தீங்கு செய்வதாகும்.

பொதுமக்கள் கஷ்டமடைவதற்கும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும் அரசாங்கம்தான் பொறுப்பு என்று வேலைநிறுத்தம் செய்பவர்களும் வேலைநிறுத்தத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கும் சிலரும் சொல்லக்கூடும். என்றாலும் ஏற்கனவே கஷ்டப்படும் மக்களை வேலைநிறுத்தம் மூலம் கஷ்டப்படுத்தாமலிருக்கலாமல்லவா?

அரசியல் கட்சிகளின் நோக்கம் வேறாக இருக்கலாம். அல்லது தொழிலாளரின் நன்மைக்காகவும் இருக்கலாம். அதைப்பற்றி நாம் இப்பொழுது இங்கு ஆராய விரும்பவில்லை. இன்று பொதுமக்கள் பெரும் கஷ்டம் அனுபவிக்கிறார்களென்பதை வேலைநிறுத்தம் செய்பவர்களும் மறுக்க முடியாது. எனவே வேலைநிறுத்தங்கள்மூலம் மேலும் கஷ்டம் கொடுக்காமலிருக்க வேண்டியது அவசியம். வேலைநிறுத்தம் நீடிப்பது வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கோ பொதுமக்களுக்கோ நன்மை தராது.

இதேசமயம் அரசாங்கத்துக்கும் பொறுப்பு உண்டு. நாட்டின் நிதிநிலைமை மோசமாகி மக்கள் வாழ்வதே பெரும் கஷ்டமாக உள்ள இச்சமயத்தில் 'ஆறப்போட்டு காரியம் சாதிக்கலாம்' என்ற நோக்கத்தைக் கைவிட்டு வேலைநிறுத்தங்களை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நிலைமையை மோசமாக்கக்கூடிய முறையில் பொறுப்புள்ள பதவிகளைவகிப்போர் ஆத்திரமூட்டும் பேச்சுக்களையோ அறிக்கைகளையோ வெளியிடாமலிருப்பது நல்லது.

நாட்டின் நலனையும் பொதுமக்களின் நலனையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும் மட்டுமல்ல இதர அரசியல் கட்சிகளுக்கும் உண்டு. எனவே நாட்டின் பொருளாதாரநிலை மோசமடையும் இச்சமயத்தில் வேலைநிறுத்தங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை எதிர்க்கட்சிகளுக்கும் இருக்கிறது. தேசிய பொருளாதார நெருக்கடி தீர்ந்து மக்கள் சீரான வாழ்க்கை வாழ வழியேற்படும் வரை வேலைநிறுத்தம் எதையும் ஆதரிப்பதில்லையென்றும் வேலைநிறுத்தங்கள் நடைபெறாமல் தடுப்பதென்றும் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

இன்று திருவள்ளுவர் தினம் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கொண்டாடப்பெறுகிறது.

அறநெறி கூறிய திருவள்ளுவர்

— அ. சரவணமுத்து —

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழுலகத்திற் பிறந்த பெருந்தகையார் திருவள்ளுவர். அப்பெருமான் மக்கள் யாவரும் அறநெறியொழுகிப் பெரும் பயனடைய வேண்டும் என்னும் பெருநோக்குடன் திருக்குறளைச் செய்தருளினர். நீதியுரைப்பதில் திருவள்ளுவருக்குச் சமானமான புலவரைக் காண்பதரிது அவரோதியருளிய அறநெறி பிறர் கூறிய அறநெறி எல்லாவற்றிலும் சிறந்தது. மக்கள் வாழ்வதற்கு வேண்டப்படும் நீதிநெறி முறைகளைக் கூறியிருக்கின்றார்.

வான்புகழ் வள்ளுவர் அளித்த திருக்குறட் செல்வம் தமிழர் பெற்ற செல்வதுட் செல்வம். இப்பெருங் காவியத்தில் உலகைக் காணலாம். உயிரைக் காணலாம். கடவுளைக் காணலாம். யாழுங்குழலும் அமிழ்துங் குலைழந்த மழலைக் குழந்தைகளின் தோற்றத்தைக் காணலாம். "திருக்குறள் தமிழ்மொழியிற் பிறந்த ஒரு பொது மறை. உலகைக் கூறுபடுத்துப் பகுதி அதன் கண் இல்லை" என்றும் "திருக்குறள் ஒன்று கற்றால் ஒருவனுக்குப் போதும் தமிழையறியலாம். மறுமையையடையலாம். யாவர்க்கும் ஒரே நீதி இயற்றியவர் வள்ளுவர்" என்றும் பெரியார்கள் கூறிய மொழிகள் சிந்திக்கத் தக்கன.

திருவள்ளுவர் வைத்து விட்டுப்போன புதையலை, அழியாச் சேமநிதியை நன்கு பயன்படுத்தாமல் தமிழ் மக்களிருப்பது மிக வருந்தத் தக்கது. நாயனரது நூலில் 1330 குறள் வெண்பாக்கள் உள. இவைகள் அநேக பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு, உலகெங்கும் தமிழ் மக்களல்லாதவர்களாற் பெரிதும் போற்றப்பட்டு, நன்கு கற்கப்பட்டு வருகின்றன.

உலகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ்ச் சங்கமும் திருவள்ளுவர் தினத்தை ஒரு வருடத்தில் ஒருமுறையாவது கொண்டாட வேண்டும். மாசி உத்தரத்திலோ, வைகாசி விசாகத்திலோ இன்னும் ஓர் தினத்திலோ கொண்டாடுவதில்ஆட்சேபமில்லை. பலமுறை கொண்டாடுவது மிக்க பயனையளிக்கும். ஒவ்வோரிடத்திலும் திருவள்ளுவர் வகுப்புக்களை ஆரம்பித்து திருக்குறளின் புனைந்துரைக் கலப்பில்லாமல் முற்றும் மெய்யுரைகளாக 1330 விளங்கும் செய்யுட்களை ஆராய வேண்டும். குறள் வெண்பாக்களை நாளுக்கொரு குறள் வெண்பாவாக நாலு வருடங்களில் எவரும் மனனம் செய்துகொள்ளலாம். இளம் வயதுதான் சிறந்த காலம் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இக்கருமத்தில் அக்கறையெடுத்தால், அரிய பெரிய இத்தொண்டு வெற்றி பெறும்,

இச்சிறந்த நோக்கத்துடன் மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கம் மாசித்திங்கள் 17-ம் நாள் (29-2-64) சனிக்கிழமை மாலை 4-30 மணி தொடக்கம் 18-ம் நாள் (1-3-64) ஞாயிற்றுக்கிழமையும் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் திருக்குறள் மகாநாடு கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்துள்ளார்கள்.

வள்ளுவனைப் பணிவோம்!

— தமிழ்த்துமிலன் —

வள்ளுவனைப் பணிவோம்-அக
வாழ்வின் இலக்கணத்தை
வகுத்த முதற் கலைஞன் (வள்ளு)

வாழ்க்கையில் பேரின்ப
வழியைத் தெரிந்தெடுத்து
மனிதப் பிறப்பில் நல்ல
புனிதச் சிறப்பமைத்து
ஆழக் கடற்றமிழில்
அமுதும் வலம்புரியும்
அழகுப் பவளமுத்தும்
அள்ளி அள்ளிப் படைத்த (வள்ளு)

கடவுட் பெருந்தவமும்
காதலின் அற்புதமும்
கற்பும் களவொழுக்கும்
சொற்களிற் காட்டலின்றி
திடமும் பெருநலமும்
சேரநடந்து காட்டிச்
செந்தமிழ்ப் பண்பிதென்று
மந்திரம் செய்துவைத்த (வள்ளு)

கண்டு கேட்டுண்டுயிர்த்து
கலந்து உற்றறிபுலனும்
ஒண்டொடி கண்ணே நிலத்
துளவென்று வாசுகியை
பிணிக்கு மருந்தெனவே
பெற்று மனிதவாழ்வை
இனிக்க இனிக்கக் கண்டு
எமக்கும் படைத்த வள்ளல் (வள்ளு)

அகர முதல என்று
அமுது கடையவந்து
ஆன சுவை யனைத்தும்
அள்ளி அள்ளிக் குவித்து
நிகரில்லா இன்ப ஊற்றில்
நீந்தி நீந்தித் திளைக்க
நீடிய ஊடலின்பம்
கூடி முயங்கலெனும் (வள்ளு)

ஐயாறன்

எழுதுவது

சென்னை சென்றபோது சுத்தானந்தபாரதியாரைப் பார்க்கவேண்டுமென்று மிகவும் ஆவல். அவர் ஸ்ரீராம் நகரில் 'யோக சமாஜ்' என்ற ஆசிரமத்தில் இருப்பதாக ஒரு நண்பர் மூலம் அறிந்தேன். ஒரு சின்ன தவறு நேர்ந்துவிட்டது. ஸ்ரீராம்நகர் என்று கூறியதும், டிரைவர் தமக்குத் தெரியும் என்று கூறி எங்கேயோ அழைத்துச் சென்றார். அங்கு யாரைக் கேட்டாலும் சுத்தானந்தரோ ஆசிரமமோ அங்கு இருப்பதாகத் தெரியாதென்று கூறிவிட்டனர். மிக ஏமாற்றமாக இருந்தது.

பிறகு ஒரன்பரைக் கேட்டபோது, சென்னையிலே இரு ஸ்ரீராம்நகர்கள் இருப்பதாகத் தெரிந்தது! ஒன்று அடையாற்றில்; மற்றொன்று ஆழ்வார்ப்பேட்டையில். சுத்தானந்தர் இருப்பது அடையாற்றில். நாங்கள் தேடியது ஆழ்வார்ப்பேட்டையில்! நீங்கள் யாரும் இந்தத் தவறு செய்துவிடப்படாதென்றே இதை இங்கு குறிப்பிடலானேன்!

* * *

பின்னர் அடையாறு ஸ்ரீராம் நகர் சென்றேன். பெரிய காம்பவுண்ட் எதிரிலே ஒரு புதிய மச்சுக்கட்டடம். கீழேயுள்ள மண்டபத்தில் அச்சு யந்திரங்கள். சுவரிலே பல வர்ண வட்டங்கள் போட்ட பெரிய படம் இருந்தது.

ஈழத்திலிருந்து ஒருவர் வந்தாரென்பதை அறிந்ததும், சுவாமியே மாடியிலிருந்து உடன் கீழே இறங்கி வந்து மேலே மச்சுக்கு அழைத்துச் சென்றார். அப்போது காலை 10 மணியிருக்கும். சுகமான நல்ல காற்று வீசியது. இலங்கை அன்பர்களைப்பற்றியெல்லாம் விசாரித்தார். பல பல மொழியிலுமுள்ள பத்திரிகைகள் அங்கு குவிந்துகிடந்தன. சுத்தானந்த நூலகம் என்று ஆரம்பித்து தமிழிலும், ஆங்கிலத்திலும் பல புத்தகங்களை எழுதி வெளியிட்டுவருகின்றார்கள். இதுவரை அவர் எழுதிய புத்தகங்களுக்கும், கவிதைகளுக்கும், கீர்த்தனைகளுக்கும் கணக்கில்லை. இன்னும் எழுதிக் கொண்டே இருக்கின்றார். ஒரு புதிய நூலைப் பார்த்தேன். இதை எழுத எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டேன்: "ஓரிரவு" என்றார்! நம்ப முடியவில்லை. இம்மென்றால் ஐநூறு அம்மென்றால் ஆயிரம் என்று கூறுவதுண்டு. இவ்விதம் எழுதும் சக்தி இக்காலத்தில் எவ்வளவு பேருக்கு உண்டு! எப்படித்தான் எழுதுகின்றாரோ!

* * *

இப்புத்தகங்களை ஈழத்துக்கு அனுப்ப முடியவில்லை என்றும், இதற்கு ஏதாவது ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் கூறி "முன்னேற்ற முழக்கம்" என்ற அருமை நூலில் 25 பிரதிகளைக் கொடுத்து அதை நாவலப்பிட்டி மாஸ்டரிடம் சேர்க்கும்படி சொன்னர். அதை தபால் பார்சலில் அனுப்பாமல் ஏன் என்னிடம் தரவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. என்றாலும் சுவாமிசொன்னபடியே இங்கு கொண்டு சேர்த்தேன்.

நல்லவேளை இடையிலே தலைமன்னாரில் பெட்டியைத் திறக்கும்படி கஸ்டம்காரர்கள் கேட்கவில்லை. கேட்டிருந்தால், அப்புத்தகங்களைக் கொண்டு போகக் கூடாதென்று தடுத்து கடலிலும் வீசியிருப்பார்கள். ஒரு பிரதிக்கு மேல் புத்தகம் கொண்டுவரமுடியாதாம். இறக்குமதி பர்மிட், லைசென்ஸ் எல்லாம் வேண்டுமென்று விளக்கிய பின்னர்தான், இறை அருளால் தப்பினேம் என்று உணர்ந்தேன்.

* * *

யாழ்ப்பாணக்குட்டிக்கு சீனப்பிரதமர் பழம் கொடுத்த கதையைக் கேட்டீர்களோ? ஹொர

(6-ம் பக்கம் பார்க்க)

லாவோஸில் கடும் சண்டை

சமவெளிப் பிரதேசம் முழுவதுமே இடதுசாரிகள் வசமாகலாம்

லாவோஸ், பெப். 28 லாவோஸிலுள்ள ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் கடந்த இருபத்திநான்கு மணித்தியாலமாக கடுமையான சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்றும் பலஇடங்களில் அரசாங்க துருப்புகள் முறியடிக்கப்பட்டனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்திலிருந்து கிழக்கே ஒரு நிலையத்தை இடதுசாரிப்படைகள் தங்கள் வசமாக்கிக் கொண்டனர் என்றும் இங்கு நடைபெற்ற சண்டையில் இரு பகுதியிலும் அதிகமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தரப்பு அதிகாரியொருவர் இதுசம்பந்தமாக தெரிவிக்கையில், இடதுசாரி பதட்லாவோ துருப்புகள் வெகுவாக முன்னேறிச் செல்கின்றனர் என்றும் ஜார்ஸ் சமவெளிப் பிரதேசமே அவர்கள் வசமாகிவிடலாமென்றும் கூறினார்.

ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் கடுமையான சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

ஷேக் அப்துல்லாவுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும்

காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க 'டைம்ஸ்' கூறும் யோசனை

புதுடில்லி, பெப். 28 நீண்டகாலமாக நிலவிவரும் காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டுமானால் இந்திய அரசாங்கம், காஷ்மீரின் முன்னாள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லாவுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறவேண்டுமென்று கட்சிப் பற்றற்ற பத்திரிகையான "டைம்ஸ் ஆப் இந்தியா" யோசனை தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் திரு. கந்தன் பி. ககல் எழுதுகையில், முகம்மது நபியின் புனிதச் சின்னம் களவாடப்பட்டதற்குப் பின்னர் மௌலானா மசூதியினால் ஸ்ரீநகரில் நியமிக்கப்பட்ட காரியக் கமிட்டி, காஷ்மீர் பள்ளத்தாக்கில் வசிக்கும் மக்களின் குரலாக மாறிவருகிறது என்று குறிப்பிட்டார்.

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்யும்படி மசூதி கோரிக்கை விடுத்தபொழுது, அஸாத் காஷ்மீரின் முன்னாள் தலைவர் சாவுத்திரி குலாம் அப்பாஸ் காஷ்மீர் பள்ளத்தாக்குக்கு திரும்ப அனுமதியளிக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். இதிலிருந்து ஒரு முகப்பட்ட சுதந்திர காஷ்மீரே உருவாக்கப்படவேண்டுமென்று அவர் விரும்புவது நன்கு புலனாகிறது என்றும் திரு. ககல் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மௌலானா மசூதிக்கு எதிராக அதிகாரிகள் எவரும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் திரு. ககல் குறிப்பிட்டுள்ளார்.

மௌலானா மசூதியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த திரு. லால்பகதூர் சாஸ்திரி விருப்பம்கொண்டுள்ளார். இச்சமயத்தில் முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லாவுடனும் பேச்சுகள் நடத்துவது உபயோகமாகவிருக்கும். காஷ்மீர் பிரச்னையைத் தீர்த்து வைக்க திரு. ஷேக் அப்துல்லாவின் ஒத்துழைப்பு உதவலாமென்றும் திரு. ககல் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

மலேஸியா தகராறு

உச்சி மகாநாடு நடத்த மகபகால், சுகர்னோ இணக்கம்

ஜாகர்த்தா, பெப். 28 மலேசியத் தகராறு குறித்து பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகாலும் இந்தோனேஷிய அதிபர் சுகர்னோவும் நடத்திய பேச்சுவார்த்தைகள் நேற்று முடிவடைந்தன.

திரு. மகபகால் இன்று மணிலா வந்து சேர்ந்தார். நிருபர்கள் மத்தியில் அவர் பேசுகையில், மலேசியத் தகராறை சுமுகமாகத் தீர்த்துவைக்கவே இந்தோனேஷியா விரும்புகிறதென்றும் இந்தோனேஷிய அதிபர் சுகர்னோவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் நட்பு சூழ்நிலையில் நடைபெற்றன என்றும் கூறினார்.

மலேசியாத் தகராறு சம்பந்தமாக உச்சிமகாநாடொன்றை நடாத்த இந்தோனேஷிய அதிபரும் திரு. மாகபகாலும் பூரண இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகாநாடு அநேகமாக அடுத்த மாதத்தில் நடைபெறலாமென்றும் இந்தோனேஷிய - மலேசிய - பிலிப்பைன்ஸ் உயர் தலைவர்கள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில்

மலேசிய எல்லைகளில் ஏற்படும் பதட்ட நிலைமையைச் சமாளிக்கும்பொருட்டு மலேசிய அரசாங்கம் இராணுவத்தினரைத் திரட்ட முடிவு செய்துள்ளது.

அந்நிய விமானங்களுக்குத் தடைவிதிக்கப்பட்ட வடக்கு போர்னியோ எல்லைமீது அந்நிய விமானங்கள் ஏதும் பறக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கும்பொருட்டு மலேசிய விமானங்கள் பல ரோந்து வேலைகளில் ஈடுபட்டுள்ளன. அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லையென்று இன்று வெளியான செய்தியொன்று கூறுகிறது.

1லட்சம் கிறிஸ்தவர் இடம் பெயர்ந்தனர்

புதுடில்லி, பெப். 27 அகில இந்திய கிறிஸ்தவ திருச்சபைத் தலைவர் ஹென்றி சாமுவேல் விடுத்துள்ள அறிக்கையில் கிழக்குப் பாகிஸ்தானில் கொடுமை தாங்காது 1 லட்சத்துக்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் இந்தியா வந்திருப்பதாயும், இந்தப் பிரச்னை இப்போது உலகப் பிரச்னை ஆகிவிட்டதால் உலக திருச்சபைகளும், ஐ. நா. வும் இதில் தலையிட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

ஐ. நா வில்

நியூயோர்க், பெப். 28 ஐக்கியநாடுகள் பந்தோபஸ்து சபையில் சைப்ரஸ் நெருக்கடி குறித்து நேற்று விவாதிக்கப்பட்டது. இன்று துருக்கி பிரதிநிதி தங்கள் நிலையை சபை அங்கத்தினருக்கு எடுத்துக் கூறுவார்.

மீன் பிடிக்க விமான உதவி

ஹம்பர்க் (டாட்) பெப்.27 ஹம்பர்க் (டாட்) கடலில் மீன்பிடிப்பது பொருளாதார சிக்கனத்திற்குக் குட்பட்டிருக்க இனி மீன்கள் அதிகமாக இருக்கும் இடங்களைக் காட்ட விமானங்களை உபயோகிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மிகவும் உயரத்திலிருந்து விசேஷ கண்ணாடிக் கருவி மூலம் பார்த்தால் அதிக மீன்கள் இருக்கும் இடம் மிகநன்றாகத் தெரிகிறதாம். இரவில் சில ஒளி கிடைக்கிறதென்றும், அதைக் கொண்டு மீன்கள் இருக்கும் இடத்தை அறியமுடியுமென்றும் சொல்கிறார்கள். ஒரு விமானம் சுமார் 300 சதுர மைல் பிரதேசத்தை எளிதில் ஆராய்ந்து மீன்கள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்துவிட முடியும்

குற்றச்சாட்டு

வாஷிங்டன், பெப். 28 வியட்காங் படைகளுக்கு சீனாவும் வடக்குவியட்னாமும் சகல உதவிகளும் அளித்துவருகின்றன என்று அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் குற்றம் சுமத்தியுள்ளார். தென்வியட்னாம் நிலைமையை நேரில் கண்டறியும் பொருட்டு அமெரிக்க அதிகாரி ஒருவர் அங்கு அனுப்பப்படவிருக்கிறாரென்றும் தென்வியட்னாமில் கம்யூனிஸ்டுகள் தலையிடுவதை அமெரிக்கா ஒருபொழுதும் அனுமதியாதென்றும் ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

புரட்சித் தலைவரை கொல்ல முயற்சி

சைகோன், பெப். 28 தம்மைக் கொலைசெய்ய சிலர் முயற்சித்தனரென்றும் ஆனால் அவர்களின் திட்டம் பலிக்கவில்லையென்றும் தென்வியட்னாம் புரட்சிசபைத் தலைவர் அறிவித்துள்ளார். கொலை முயற்சியில் சம்பந்தப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனரென்றும் அவர் அறிவித்துள்ளார்.

புதிய உடன்படிக்கை

புதுடில்லி, பெப். 28 பாரதத்திற்கும் யுகோஸ்லோவேகியாவுக்குமிடையே நேற்று புதுடில்லியில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அகதிகள்

புதுடில்லி, பெப். 28 கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இதுவரை 29,000 அகதிகள் மேற்கு வங்காளத்துக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ அகதிகள்

புதுடில்லி, பெப். 28 கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இதுவரை ஒரு லட்சத்திற்குமதிகமான கிறிஸ்தவ அகதிகள் இந்தியாவுக்கு வந்துள்ளனரென்று அகில பாரத கிறிஸ்தவர்கள் சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

நிபுணர்கள் கோஷ்டி

புதுடில்லி, பெப். 28 அமெரிக்க உயிர்நூல் நிபுணர்கள் கோஷ்டியொன்று பாரதம் வந்துள்ளது. இங்கு அவர்கள் பல பரீட்சைகள் நடத்துவார்கள்.

தமிழ்நாடு

சென்னை, பெப். 28 தமிழ்நாடு கீழ் சட்டசபை தனது பட்ஜட் கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்தது.

எமது விமானங்களை பாகிஸ்தான் தவறான பாதையில் திருப்புகிறது

லோகசபையில் சாவன் தகவல்

புதுடில்லி, பெப். 28 அதிகரித்துவரும் பாகிஸ்தானின் எதிர்ப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக இருபது அங்கத்தினர்கள் தாக்கல் செய்த அவசரப் பிரேரணை மீது நேற்று லோகசபையில் நடைபெற்ற விவாதத்தில் பாதுகாப்பு மந்திரி திரு சாவன் பேசுகையில்; இந்திய எல்லைக்கு வெளியே நடைபெறும் எவ்வித எதிர்ப்புக்களையும் சமாளிக்க இந்தியா தயாராக இருக்கிறதென்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இப்பொழுது பலப்படுத்தப்பட்டுள்ளதென்றும் கூறினார்.

"பாகிஸ்தான் துருப்புகளும், பாகிஸ்தான அரசாங்கமும் நடந்துகொள்ளும் முறை கண்டிக்கக் கூடியது மட்டுமின்றி எமக்கு ஆத்திரத்தையும் உண்டுபண்ணக் கூடியதாக விருக்கின்றன. எமது விமானங்கள் பறந்து செல்லும் பொழுது, பாகிஸ்தான் பிரதேசத்திலுள்ள சில வானொலிகள் திசைகளை மாற்றி சைகைகள் கொடுப்பதால் எமது விமானங்கள் வேறு வழிகளுக்குச் செல்லவேண்டியேற்படுகின்றன. பாகிஸ்தானிலுள்ள சில வானொலிகள் வேண்டுமென்றே இப்படியான சைகைகள் செய்வதால்; நமது விமானங்கள் தவறான வழிகளில் சென்று விபத்துக்குள்ளாகவும் நேரிடுகிறது" என்றும் திரு. சாவன் தெரிவித்தார்.

"கடந்த 14-ம் திகதி காணாமற் போன எமது விமானத்தை தேடச் சென்ற சில விமானங்களை பாகிஸ்தான் வேண்டுமென்றே திருப்பி விடுகின்றன. இதுபற்றி நாம் பாகிஸ்தான் அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளோம்" என்றும் திரு. சாவண் தெரிவித்தார்.

"இம்மாதம் 19, 20-ம் திகதிகளில எமது விமானங்களுக்கு பெயர் தெரியா விமானத் தகவல் நிலையமொன்று தவறான வழிகளைத் தெரிவித்து வேறு வழிகளில் அவற்றைப் போகச் செய்ய முயற்சியெடுத்தது. ஆனால் அந்த நிலையத்தின் முயற்சி பலிக்கவில்லை. அந்த நிலையம் தெரிவித்த தகவல்களைப் பின்பற்றியிருந்தால், எங்கள் விமானங்கள் மேற்குப் பாகிஸ்தானிலுள்ள சக்காளா என்ற இடத்துக்குப் போயிருக்கும்" என்றும் திரு. சாவண் தெரிவித்தார்.

600 தொழில்களில் பயிற்சிபெற மேற்கு ஜெர்மனியில் வாய்ப்பு

ஹாம்பார்க், (டாக)பெப். 29 இவ்வருடம் ஆரம்ப மாதங்களில் அநேகம் ஜெர்மன் மாணவ மாணவிகள் பல தொழில்களுக்கான பயிற்சியைப் பெறவிருக்கின்றனர். ஏப்ரல் முதல் திகதிமுதல் இத்தகைய பயிற்சிவகுப்புகள் பெரும்பாலும் ஆரம்பமாகின்றன.

மேற்கு ஜெர்மனியில் எத்தொழிலுக்கும் பயிற்சிபெறுவதில் எவ்விதக் கஷ்டமுமில்லை. இதனால்தான் பெரிய கம்பனிகளெல்லாம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் தேவை என்று விளம்பரப்படுத்துகின்றன. இம்மாதிரி அளிக்கப்படும் தொழில் பயிற்சி மிகவும் பயனளிக்கத்தக்கவையாக இருக்கின்றன என்பது மேற்கு ஜெர்மனியிலுள்ள ஏகோபித்த அபிப்பிராயம்.

உடல் உழைப்பு, இயந்திரத் தொழில் எல்லாவற்றிலுமே விசேஷ பயிற்சிபெற்று நிபுணத்துவம் பெறுவது என்பது இப்போது ஒரு வழக்கமாகிவிட்டது. பெரிய கம்பெனிகளில் நல்ல சம்பளம் இதர வசதிகள் இவைகள் மேலும் மேலும் இளைஞர்களை ஊக்குவித்து பயிற்சிபெறத் தூண்டுகின்றன. ஆண்கள் மின்சார எஞ்சினியரிங் துறையை பெரிதும் விரும்புகிறார்கள். வங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனி ரேடியோ, டெலிவிஷன் இவைகள் எல்லாம் நல்ல வேலை வாய்ப்பைத்தருகின்றன. பெண்களில் பெரும்பாலும் காரியாலயங்களில்வேலைசெய்வதையே விரும்புகின்றனர். சமீபகாலமாக நர்ஸிங் தொழில் துணி வியாபாரம் இவைகளில் பெண்கள் வேலைக்குச் செல்வது அதிகரித்துள்ளது. மேற்கு பெர்லினிலிருந்து வந்த தகவல்களின்படி இளைஞர்கள் ஒருசில வேலைகளுக்கேதான் போக விரும்புகிறார்களெனத் தெரிகிறது. 1962-ல் மூன்றில் இரண்டு மாணவர்கள் 36 வேலைகளுக்கே விரும்பி பயிற்சி பெற்றனர். பெண்களில் மூன்றில் இரண்டு பங்கினர் 16 வெவ்வேறு வேலைகளிலேயே பயிற்சி பெற முன் வந்தனர். மொத்தம் 600 தொழில்களில் பயிற்சி பெற வசதியிருக்கும்போது ஒருசில தொழில்களுக்கே பயிற்சி பெற இவர்கள் முன்வந்தது சிந்திக்கத்தக்கதாகும்.

இவ்வருடம் 12 லட்சம் மாணவர்கள் பயிற்சி பெறுவர். அப்படியிருந்தும் அநேக பயிற்சித்துறைகளுக்கு ஆள் இல்லாமலேயே இருக்கும். ஹாம்பர்க்கில் 12000 வேலைகளுக்கான பயிற்சி ஸ்தானங்கள் இன்னும் காலியாகவே இருந்து வருகின்றன. மற்ற பெரிய நகரங்களிலும் இதே நிலைமைதான். மேற்கு ஜெர்மனியில் தொழில் நடத்தும் ஸ்தாபனங்களே பயிற்சியையளிக்கின்றன.

பீக்கிங்கில் பேச்சுவார்த்தை

மாஸ்கோ, பெப். 28 சீன-சோவியத் அதிகாரிகள் பீக்கிங்கில் சந்தித்து எல்லை விஷயமாக பேச்சுகள் நடத்துகிறார்கள் என்று இங்குள்ள ராஜீய வட்டாரங்கள் தெரிவித்தன.

சில்லறை விஷயங்கள் குறித்து நீண்ட நேரத்திற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தத் தேவையில்லை என்று ரஷ்ய பிரதிநிதிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆனால் எல்லை விஷயங்கள் குறித்து ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை நீக்க சீனா முயலும் என்று கூறப்படுகிறது.

முதலாவது கப்பல்

லண்டன், பெப். 28 உலகின் முதலாவது உல்லாச பிரயாண நீர்மூழ்கிக் கப்பல் நாளை வெள்ளோட்டத்திற்கு விடப்படும். இக்கப்பல் சுவிற்சலாந்தில் ஜக்ஸ் பிக்காடி என்பவரால் கட்டப்பட்டது.

சோவியத் கிரகம்

மாஸ்கோ, பெப். 28 சோவியத் ரஷ்யா, நேற்று மற்றுமொரு செய்திக்கிரகமொன்றை விண்வெளிக்கு அனுப்பிவைத்தது.

இவ்வருடத்துடன் இசையாளர் வருகை நிறுத்தப்படலாம்

நல்லூர், வெள்ளி

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப்படும் இசைக்கலைஞர்களின் வருகையைத் தடைசெய்யும் அரசாங்கத்தின் யோசனை தீவிரமாக அமுல் நடத்தப்படவிருக்கிறது. யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றம் இவ்வருடம் ஆறுகலைஞர்களை வருவிக்க அனுமதி வழங்கலாம் என்று செய்துள்ள சிபார்சுமீது அரசாங்கம் இதுவிஷயமாகப் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இசையாளர் குடும்பங்களின் கஷ்டத்திற்கு தீர்வுகாணும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து வருவிக்கப்படும் கலைஞர்களின் தொகையை அரசாங்கம் அனுமதி வழங்குவதன்மூலம்குறைத்துக் கொண்டு வந்துள்ளமைக்கு இசையாளர்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பினை அவதானித்த இந்த அரசாங்கம் இந்த ஆண்டுடன் கலைஞர்களின் வருகையை முற்றுத் தடைசெய்ய உத்தேசித்துள்ளதாகவும் தெரிகிறது. சென்ற ஆண்டில் எட்டுக்கலைஞர்களை வருவிக்க அரசாங்கம் அனுமதியளித்திருந்ததனையொட்டி இந்த ஆண்டு கடைசித் தடவையாக நான்கு பேரை அழைக்க அனுமதியளிக்கப்படலாம்.

யாழ்ப்பாணம் பிரதேசகலாமன்றம் இந்தியக் கலைஞர்களை வருவிப்பது சம்பந்தமாக இசையாளர்கள் ஐக்கிய அபிவிருத்திச்சங்கத்திடம் ஆலோசனை எதுவும் கேட்கவில்லையென இசையாளர்சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இசையாளர் சங்கம் பிரதம மந்திரிக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் இசையாளர்களின் நிலைபற்றி தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இசைக் கலைஞர்களின் வருகை கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள இசையாளர் குடும்பங்களில் மலர்ந்துள்ள மகிழ்ச்சியைக் கெடுத்துவிட வேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில்

தமிழ்அரசாங்கம் அமைப்பதே தமிழரசுக்கட்சியின்நோக்கமாம்

சிங்களப் பத்திரிகை ஆருடம்

கொழும்பு, வெள்ளி

வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் புறம்பான அரசாங்கத்தை நிறுவுவதே தமிழரசுக்கட்சியின் நோக்கமாக இருக்கிறதென்றும் பிரதமரிடம் தமிழரசுக் கட்சியினர் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகள் இதைப் புலப்படுத்துகின்றது என்றும் சிங்களப் பத்திரிகையான 'தவஸ' தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

மொழிப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் பிரதமர் கூட்டவிருக்கும் சர்வகட்சி மகாநாடுபற்றிக் குறிப்பிட்டு எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஒரு தமிழ் அரசாங்கம்' என்ற தலைப்புடன் சென்ற புதன்கிழமை வெளியான 'தவஸ'வில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுவரை பல தகராறுகளுக்குக் காரணமாயிருந்த மொழிப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் பல புதிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என அறியப்படுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக சர்வகட்சி மகாநாடொன்றை அரசாங்கம்கூட்ட விரும்புவதாகவும் இந்த மகாநாட்டில் சகல எதிர்க்கட்சிகளும் பங்குபற்றலாமெனவும் அறியப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு புறம்பான அரசாங்கத்தை அமைப்பதே தமிழரசுக் கட்சியின் நோக்கமாக இருக்கிறது பிரதமரிடம் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளிலிருந்து இது தெரியவருகிறது. இந்தக் கோரிக்கைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் தமிழில் மட்டுமே நடத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

1956-ம் வருடத்து பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தில் இந்தக் கோரிக்கைகள் அடங்கியிருந்தன. ஆனால் இவை காலம் சென்ற திரு. பண்டாரநாயகாவினால் அமுல் நடத்தப்படாது 1958-ம் வருடம் விலக்கிவைக்கப்பட்டன. இந்த ஒப்பந்தத்தின் ஒரே நோக்கம் நாட்டைப் பிரிப்பதுவே. இந்த ஒப்பந்தத்தைப் புறக்கணித்ததிலிருந்து திரு. பண்டாரநாயகா இந்த நாட்டைப் பிரிப்பதை விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. தமிழரசுக் கட்சியுடன் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கும் அரசாங்க கட்சி இதை ஞாபகத்தில் வைத்திருப்பது அவர்களது கடமையாகும்.

மொழிப்பிரச்சினையில் சிறுபான்மையினருக்கு நீதி வழங்க வேண்டியது சரியானதே. ஆனால் பெரும்பான்மையோரைக் காட்டிக் கொடுக்காதவாறு கவனமாக நடந்துகொள்ள வேண்டும்,

அரசாங்கத்தின் துணிச்சல்பற்றி ஈ. ஆர். எஸ். ஆர்.

களனி, வெள்ளி

மூன்று எண்ணெய்க் கம்பெனிகளையும் தேசியமயமாக்கியதே இலங்கை சுதந்திரமடைந்தபின் எந்த ஒரு இலங்கை அரசாங்கமும் செய்யாத மிகவும் துணிகரமான செயல் என எண்ணெய் கூட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி களனி வித்தியாலயங்கார பல்கலைக்கழகத்தில் பொருளாதார மாணவர்சங்க கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் கூறினர்.

வண. டி. சிவாவிதேரோ கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

வித்யோதயாபற்றி வித்யாலங்காரா மாணவர் கருத்து

கொழும்பு, வெள்ளி

வித்தியோதய பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகஸ்தர்கள் திறமையற்றவர்களாகவும் தகுதியற்றவர்களாகவும் இருக்கிறார்களெனவும் இந்தப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் ஊழல்களுக்கும் தகராறுகளுக்கும் இதுவே முக்கிய காரணமென்றும் வித்தியாலங்கார பல்கலைக்கழக மாணவர் கவுன்சிலின் கமிட்டி சுட்டிக்காட்டியுள்ளது.

சமீபத்தில் கங்கொடவில வித்யோதய பல்கலைக்கழகத்தில் பௌத்த பிக்குகளுக்கும் சாதாரண மாணவர்களுக்குமிடையே இடம்பெற்ற கைகலப்பு சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே வித்தியாலங்கார பல்கலைக்கழக மாணவர் கவுன்சில் கமிட்டி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'திறமைசாலிகளுக்கு இங்கு இடமில்லை'

கொழும்பு, வெள்ளி

"அரசாங்க தலைமைக்காரியாலயங்களின் நிர்வாக அலுவல்களில் அரசியல்வாதிகள் தலையிடுவதால் சமூகத்தில் திறமைசாலிகளுக்கு அவர்களுக்குரிய இடம் கிடைக்காது போய்விடுகிறது" என முன்னை நாள் சபாநாயகமும் நாத்தாண்டியா எம். பி. யுமான சேர் அல்பேட் பீரிஸ் நாரவிலாவிலுள்ள அரசாங்க பௌத்த கலவன் பாடசாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள புதிய கட்டம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி நிரந்தரக் காரியதரிசி டாக்டர் ஆனந்த குருகே புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்

திரு. பீரிஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசியல்வாதிகள் தலையிடுவதால் அரசாங்க இலாகாக்களிலுள்ள சிரேஷ்ட உத்தியோகஸ்தர்கள் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற முடியாத நிலைமையிலிருக்கிறார்கள். பலசமயங்களில் அரசியல்வாதிகளால் இந்த உத்தியோகஸ்தர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகளின் கட்டளைகளை நிறைவேற்றாதபோதே இவ்வாறு இவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள்

இலங்கையின் எதிர்காலம் மிக மோசமாக இருக்கும். இப்போதுள்ள நிலைமை நீடிக்குமாயின் விரைவில் இந்த நாட்டைக் காடையர்கள்தான் ஆட்சிசெலுத்துவார்கள். எந்த ஏழை விவசாயிகளின் வாக்கினால் சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்தில் அமர்ந்ததோ அதே விவசாயிகள் பட்டினி கிடக்க வேண்டி நேர்ந்துள்ளது. பழிக்குப்பழி வாங்குவதற்காக இவர்கள் காத்துநிற்கிறார்கள்.

சந்தேகநபர் சரண்

காங்கேசன்துறை, வெள்ளி

கடந்த புதன்கிழமை வசாவிளானில் நடந்த இரட்டைக் கொலை சம்பந்தமாக பொலிஸார் தேடித்திரிந்த சந்தேகநபர்களில் இருவர் நேற்று மல்லாகம் கோர்ட்டில் சரணடைந்தார்கள்.

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபான இருவரையும் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

காய்கறி வியாபாரிகள் கடும் ஆட்சேபம்

பண்டாரவளை, வெள்ளி

ஞாயிறு சந்தையில் தமக்கு அதிக கட்டணம் விதிக்கப்படுவதை பண்டாரவளையிலுள்ள காய்கறி சில்லறை விற்பனையாளர்கள் ஆட்சேபித்துள்ளார்கள்.

சந்தையைக் குத்தகை எடுத்தவர் 1964-ம் வருடத்துக்கு நகரசபைக்கு ரூ 28,800 00 செலுத்த ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் இதனால் அவர் மேலதிக கட்டணம் கோருகிறார் என்றும் காய் கறி உற்பத்தியாளர் சங்கக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

இவ்விதம் அதிக தொகைக்கு குத்தகை கொடுத்ததுபற்றி நகரசபைமீது இவர் புகார் கூறியுள்ளார்.

வித்யோதய பல்கலைக்கழகத்தை இன்னும் 10 நாட்களுக்குள் மீண்டும் திறக்கவேண்டுமென்றும் அங்குள்ள மாணவர்கள், சங்கமொன்று அமைத்து தமது குறைபாடுகளை வெளியிட சந்தர்ப்பமளிக்கவேண்டுமெனவும் அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியருக்குக் கடிதம்

பண்டைய அறத்திற்கும் தண்டனையா?

இந்த உலகம் அறத்தினால்தான் நிலைநிற்கின்றது. இதை அறியார் பலர். அறிந்த அறிஞர் பெருமக்களின் தருமம் யாவரையும் பாதுகாக்கின்றது. சமய நெறிதான் மக்களின் ஒரு கண். ஆன்றோர் மொழிதான் மற்றொரு கண். ஆன்மசக்தியுணர்ந்த புண்ணிய பூமியில் இந்த இரு கண்களும் ஒளி துளும்பின யாழ்ப்பாணத்தில் நாவலரவர்கள் அவதரியாவிட்டால் என்செய்வாரோ? அறியோம். வீடுகட்டுவது கட்டம். பிழைகாண்பதோ அதனை இடிப்பதோ சுலபம். காலம் பலவித மாறுதலடையும். அறமோ ஒரே பெற்றித்தாய் யாவரையும் பாதுகாக்கும். நாவலரவர்களின் வித்தியாசாலைகள் கல்விக்கொரு பெருஞ்சோதி நிலையமானவை. யாழ்ப்பாணத்து கல்விச்சாலையும் சிதம்பரக் கல்விக்கழகமும் சதாசிவப்பிள்ளை என்ற நாவலரவர்களின் பிரதம மாணாக்கரால் பரிபாலிக்கப்பட்டன. வண்ணை மாநகரின் தவநிலையமாகிய ஞானப்பெரு மன்றம் திரு. க. கைலாசபிள்ளையவர்கள் பெருமுயற்சியால் அழியாத நிலையமாக மிளிருகின்றது. பட்டவேட்டையும் அதிகாரமும் விரும்பினோர் சிலர் அதற்கும் இடையூறு செய்யத் தலைப்படுவது மக்கட் பண்பன்று. அதில் கற்ற பழங்கிழவன் யான். என்போன்றோர் பலருளர் அறிவொளி பெறும் மாணாக்கரும் பலர். ஆகவே பொது அறத்தை பொதுமக்கள் நலன் நாடித் தீங்கிழையாது வளர்ச்சிக்காவன செய்யத் தமிழ் மக்கள் முன்வருவார்களாக.

நாவலர் அறம் வாழ்க.

வ. மு. இரத்தினேஸ்வரஐயர்

இசைக்கருவி இறக்குமதிக்கு அனுமதியளிக்க கோரிக்கை

தெல்லிப்பழை, வெள்ளி

இலங்கையில் இசைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை இந்தியாவிலிருந்து வரவழைப்பதற்கு அரசாங்கம் அனுமதியளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது

இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த கூட்டம் மாவிட்டபுரத்திலுள்ள இசையாளர் மடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. வி. எஸ். விசுவலிங்கம்பிள்ளை தலைமைவகித்தார். கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். சிவசோதியும் இக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தார். இந்தியாவிலிருந்து நாதசுரம், முதலான இசைக்கருவிகளும் உபகரணங்களும் வராமையினால் அவற்றை வருவிக்கவேண்டிய அவசியம் பற்றி வற்புறுத்தப்பட்டது. இசைத் தொழிலுக்கு வேண்டிய கருவிகள், உபகரணங்கள் இந்தியாவிலிருந்து வருவிக்கப்படாவிட்டால் இலங்கையில் இசைக்கலைஞர்கள் தமது தொழிலை இழந்தவர்களாக வாழவேண்டியநிலை ஏற்படுமென்றும் இக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இசையாளர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வி. எஸ். விசுவலிங்கம்பிள்ளை, உப-தலைவர்: திரு. என். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை, காரியதரிசி: திரு. எஸ். கே. இராசா, உபகாரியதரிசி; திரு. இ. ராசு, தனாதிகாரி: திரு. மா. சோமசுந்தரம், கணக்காளர் திரு. ஆர். சண்முகநாதன்.

நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறை வசந்தகான சபை, நடிகமணி திரு. வி. வி. வைரமுத்துவின் கலைத்திறனைப் பாராட்டி சென். ஜேக் வாசிகசாலை முன்றலில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது. கலையரசு க. சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் முதலியார் சி. முத்துத்தம்பி, முன்னாள்செனட்டர் திரு. ஜி. நல்லையா, திரு. எஸ். எம். மார்ட்டின் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். திரு. டி. தேவமணி வாழ்த்துப்பத்திரம் வாசித்தளித்தார்.

வசந்தகான சபையினரின் 'அரிச்சந்திர மயானகாண்டம்' நாடகமும் விழாவில் இடம்பெற்றது.

திருக்குறள் மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

மல்லாகம் சைவவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் இன்றும் நாளையும் திருக்குறள் மகாநாடு நடைபெறவிருக்கிறது.

மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் இன்று மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த மகாநாட்டுக்கு செனட்டர் க. நடேசபிள்ளை தலைமைவகிப்பார். கவி அரங்கும் உரை யரங்கும் இசையரங்கும் இன்று நடைபெறும்.

நாளை திரு. கே. பி. ஹரன் தலைமையில் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் உரையரங்கும் மாணவர் அரங்கும் வில்லுப்பாட்டும் இடம்பெறும்.

மாணவர் பேச்சுப் பாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

கிறிஸ்தவ மாணவிகள் பீடாதிபதியை சந்தித்தனர்

கண்டி, வெள்ளி

இலங்கை கிறிஸ்தவ சபையின் நிர்வாகத்தில் இயங்கிவருவதும், கண்டியில் பிரபல்யம் வாய்ந்த பெண்கள் கல்லூரியுமான ஹில்வூட் கல்லூரி கிறிஸ்தவ மாணவிகள் மல்வத்தை பீடதிபதியைச்சந்தித்தனர். கல்லூரியின் பௌத்த சங்கத்தைச் சேர்ந்த 150 மாணவிகள் கல்லூரி அதிபர் செல்வி பி. ஈ. டி' அல்விஸ் தலைமையில் பீடாதிபதியைச் சந்தித்தனர்.

புதுவருட நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் வருடாந்தக் கூட்டம் சங்க வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;-

தலைவர்: திரு. இ. இரத்தினசபாபதி, உபதலைவர்: திரு. ஆ. ஸ்ரீபத்மநாதன், செயலாளர்: திரு. இ. சர்வானந்தன், உபசெயலாளர்: திரு. க. விஜயரத்தினம், பொருளாளர்: திரு. வே. சண்முகநாதன்.

மாசிமகத் தீர்த்தம்

சுழிபுரம், வியாழன்

திருவடிநிலை கடலில் பலநூற்றுக்கணக்கான மக்கள் இன்று காலை மாசிமகத் தீர்த்தம் ஆடினர். பொன்னாலை வரதராஜப் பெருமான் திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு பக்தர்கள் புடைசூழ கொண்டுவரப்பட்டார்.

கீரிமலை, வெள்ளி

கீரிமலை நகுலேஸ்வர சுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது. இவ்வாலய உற்சவங்கள் பதினைந்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

சிறிமா யோசனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்துசீனத்துருப்புக்களை வாபஸ் பெறுவதன் மூலம் சீனப் பிரதமரும் இந்தியப்பிரதமரும் சந்தித்துப்பேச வேண்டியது அவசியமென்றும் இலங்கைப் பிரதமர் கூறியதாக அறியப்படுகிறது.

உதவிப் பிரதமர் மார்ஷல் சென்யியுடன் கலந்தாலோசனை செய்த சீனப்பிரதமர், இவ்விஷயம் கொள்கை சம்பந்தப்பட்டதாகையால் தமது அரசாங்கத்துடன் கலந்தாலோசனை செய்தபின்னரே முடிவு சொல்ல முடியுமெனக் கூறியதாக அறியப்படுகிறது.

நேற்றைய பேச்சுவார்த்தைகளின்போது பர்மிய அதிபர் ஜெனரல் நீவின் அனுப்பிய செய்தியொன்றையும் இலங்கைப் பிரதமர் சமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

இந்திய-சீனப் பிரதமர்கள் விரைவில் சந்தித்துப் பேச வேண்டுமென்றும் இருவரும் ரங்கூனில் சந்தித்துப் பேசலாமென்றும் ஜெனரல் நீவின் தமது செய்தியில் தெரிவித்திருந்ததாக அறியப்படுகிறது

வானொலிநிகழ்ச்சிகள்

கொழும்பு

சனி 29-2-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை.

இரவு 6-45 செய்திச்சுருள் — கண்டதும் கேட்டதும், 7-00 பாட்டு — ஏ. நடராசா, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு— திருவள்ளுவர் — கரு. முத்து. தியாகராஜன், 9-30 வயலின் — எஸ். சர்வேஸ்வரசர்மா, 10-00 நேயர் விருப்பம்.

ஞாயிறு 1-3-64

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த போதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9 30 திரைஇசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைஇசை, 6-15 தாளவாத்தியக்கச்சேரி,

இரவு6-45 பாட்டு — சாரதா நவரத்தினம், லலிதா நவரத்தினம்7-15 வீணை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மாதர்விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

திருச்சி

சனி 29-2-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கலஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 திருவள்ளுவப் பாமாலைப் பாடல்கள்,

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 2-10 இசைக்கோவை.

மாலை 5-15 திரைப்பட இசை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 நாடகவிழா — பிரவாகம் — ராஜம் கிருஷ்ணன் எழுதியது, 8-40 தேசபக்திப் பாடல்கள், 8-15 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

கைத்தொழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 500 பெறும் டிக்கட்டுகளின் விபரம்:

14 N 0504
16 Q 0028
11 C 0880
10 X 0037
03 T 0494
06 Q 0317
11 W 0300
03 A 0205
09 K 0559
10 G 0180
01 J 0852
10 S 0267
05 K 0483
02 V 0244
11 P 0299
02 D 0096
02 C 0514
02 F 0629
03 R 0671
13 Z 0354
08 I 0713
05 D 0905
06 G 0520
02 Y 0500
14 Z 0842
05 I 0810
17 J 0542
01 V 0183
13 M 0511
12 K 0557
02 X 0555
06 K 0255
16 A 0546
05 M 0979
03 H 0476
09 C 0834
15 J 0377
12 M 0779
04 J 0092
10 X 0673
14 I 0309
11 B 0121
09 Z 0930
09 S 0724
10 F 0505
07 W 0632
12 D 0703
11 V 0636
09 J 0626
06 D 0812

03 M 0865
01 V 0866
05 K 0971
13 D 0199
12 M 0265
10 Z 0275
09 Z 0481
11 I 0313
09 B 0699
07 U 0520
08 I 0095
17 Q 0283
04 N 0906
09 T 0844
02 U 0867
14 M 0819
07 N 0260
07 C 0780
16 M 0873
03 D 0696
16 B 0979
04 C 1318
10 K 0292
12 U 0648
02 B 0785
03 D 0258
14 A 0665
14 Q 0299
09 M 0005
09 X 0890
16 V 0904
11 Y 0778
07 V 0688
03 N 0047
09 M 0374
03 D 0691
01 Q 0465
10 W 0667
15 R 0997
15 C 0579
15 W 0832
07 P 0842
17 S 0843
07 Q 0201
03 N 0108
15 Z 0679
07 Y 0281
07 T 0300
02 P 0538
16 H 0199

தலா ரூபா 250-00 பெறும் டிக்கட்டுகள்:

08 A 0683
08 B 0683
08 C 0683
08 D 0683
08 E 0683
08 F 0683
08 G 0683
08 H 0683
08 I 0683
08 J 0683
08 K 0683
08 L 0683

08 M 0683
08 N 0683
08 P 0683
08 Q 0683
08 R 0683
08 S 0683
08 U 0683
08 V 0683
08 W 0683
08 X 0683
08 Y 0683
08 Z 0683

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் செய்வதற்கு முன் தினமும் இரு தினங்களுக்கு முன்னரும் ஆப்பரேஷன் செய்துகொண்டவர்கள் வைத்தியநிபுணர்கள் வாராததால் பெரிதும் கவலைகொண்டிருக்கிறார்கள். தமது நோய்க்குரிய மருந்துகள் ஒழுங்காகத் தரப்படுகின்றனவோ என்று அவர்கள் அச்சமடைந்துள்ளனர் தமது நோய் காரணமாக ஏற்படும் வேதனைகளைச் சொல்லி அவற்றுக்குத் தகுந்த சிகிச்சை கிடைக்குமோ என ஐயம் கொண்டுள்ளார்கள். இரண்டாவது தடவையாக ஆப்பரேஷன் செய்துகொண்டவர்கள் முதல் தடவை தாம் ஆப்பரேஷன் செய்துகொண்டபோது தமக்குத் தரப்பட்ட மருந்துகள் போன்று இந்தமுறை வழங்கப்படவில்லையென்று வைத்தியநிபுணர்கள் இல்லாத குறையை பெரும் குறையாகக் கூறுகிறார்கள்.

600க்கு மேற்பட்ட நோயாளர்கள் இருக்கும் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் இப்போது 8 வைத்தியர்கள் மட்டுமே சேவை செய்து வருவதாக அறியப்படுகிறது. இதில் இருவர் ஓய்வுபெற்ற வைத்தியர்கள், இந்த இருவரும்வெளிநோயாளர் பகுதியில் கடமையாற்றிவருகிறார்கள். இதர வைத்தியர்கள் ஆஸ்பத்திரி நிர்வாக டாக்டர்கள். இந்த டாக்டர்களுக்கு உதவியாக அப்போதிக்கரிமாரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த அப்போதிக்கரிமார் பதவியும் தாதிமார் பதவியும் கிட்டத்தட்ட ஒரே வகையிலமைந்த பதவியாக இருப்பதால் அப்போதிக்கரிமார்ன் கட்டளைகளை தாதிமார்கள் சிலசமயங்களில் உதாசீனம் செய்துவிடுவதாகவும் தெரிகிறது.

காஷ்மீரின் புதிய பிரதமராக குலாம் முகமது சதீக் தெரிவு

ஸ்ரீநகர், பெப். 28

ஜம்மு காஷ்மீர் புதிய பிரதமாராக குலாம் முகம்மது சதிக் நாளை பதவியேற்பார். ஜம்மு காஷ்மீர் சட்டசபை ஆளும்கட்சித்தலைவராக இவர் இன்று காலை தெரிவு செய்யப்பெற்றார். இவருடைய பெயரை தேசிய மகாநாட்டின் தலைவர் பக்ஷிகுலாம் முகம்மது பிரேரித்தார். ஜம்மு காஷ்மீர் பிரதமர் பதவியிலிருந்து ஜனுப் ஷம்சுதீன் இன்று ராஜினாமாச் செய்தார்.

52 வயதான ஜனுப் சதீக், காஷ்மீர் மந்திரியாகவும், நீண்டகால சட்டசபை அங்கத்தவராகவும், அரசியல் நிர்ணயசபைத் தலைவராகவும் பதவி வகித்திருப்பதுடன் ஜம்முகாஷ்மீர் தேசிய மகாநாட்டின் முதலாவது தலைவராகவும் பதவிவகித்துள்ளார்.

இன்று பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கடினமான பணிகளைத்தாம் நிறைவேற்ற வேண்டியிருப்பதாகவும் மக்களின் ஒத்துழைப்பும் அமைதியான சூழ்நிலையும் வேண்டுமென்று கூறினார். ராஜ்யத்தின் நன்மையும் மக்களின் முன்னேற்றமுமே தமது இலட்சியம் என்று சதீக் தெரிவித்தார்

பண்டாரநாயக்கா கொலை விசாரணை

சாட்சியமளிக்கஇருமந்திரிகளுக்கு கமிஷன் அழைப்பு

கொழும்பு, வெள்ளி

பண்டாரநாயகா கொலை சம்பந்தமாக விசாரணை செய்யவிருக்கும் கமிஷன் முன் சாட்சியமளிப்பதற்கு கல்வி மந்திரி திரு பி. பி. ஜி. கலுகல்லையும் உள்நாட்டு மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியாவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரநாயகாவின் கொலைக்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றனவாவென்பது பற்றி விசாரணை செய்யவிருக்கும் இக்கமிஷனில் ஐக்கிய அரசுக் குடியரசு நீதிபதி அடெல் யூனிஸ், கானா சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஜி வி. மில்ஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இதன் தலைவர் நீதியரசர் திரு. டி. எஸ். பெர்னாண்டோ, மார்ச் மாதம் 11-ந் திகதி கமிஷனின் விசாரணை ஆரம்பமாகும்.

அன்றையத் தினம் சாட்சியமளிக்க வருமாறு திரு. கலுகல்லையும் திரு. ஜயசூரியாவும் அழைக்கப்பட்டிருப்பதுடன் காலி எம். பி.யும் முன்னாள் பிரதமருமான திரு. டபிள்யு தகநாயகா, முன்னாள் சுகாதார மந்திரி விமலா விஜயவர்த்தன, திரு. ஒஸ்வி கொரியா, ஓய்வுபெற்ற பொலிஸ் சுபரின்டென்ட் திரு. லயனல் குணதிலகா, முன்னாள் நிதிமந்திரி திரு. ஸ்டான்லி டி சொய்சாவின் சகோதரர் திரு டிக்கி டி சொய்சா ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆயுர்வேத அபிவிருத்திக் கமிஷனர் திரு. டபிள்யு ஜே. பெர்னாண்டோவும் சாட்சியமளிக்க வருமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லையில் ஸ்ரீமாவின் பங்களாவில் ஒரு யானைக்குட்டி உண்டு. அதன் வாயில் பழங்கள் கொடுக்குமாறு ஸ்ரீமா, சூவைக்கேட்கவே, அவர் முதலில் பயந்து மறுத்து விட்டாராம். உலகத்தை எல்லாம் கதிகலங்க வைக்கும் சூவுக்கு நமது ஒரு யானைக்குட்டியிடம் எவ்வளவு பயம்!

உடனே வீராங்கனை ஸ்ரீமா, பழங்களைத் தமது யானைக்குட்டிக்கு வாயில் ஊட்டியதை சூவும் அவரது சீனக்கோஷ்டியினரும் சற்று நேரம் வியப்புடன் சிரித்துக்கொண்டே பார்த்து விட்டு, பின்னர் சற்றே பயம் தெளிந்து, பழங்களை அந்தக்குட்டிக்குக் கொடுத்தார்களாம்.

* * *

பிரதமர் சூவும் கோஷ்டியினரும் இம்முறை கே. எல். எம். டச்சு விமானங்களில்தான் இங்கு வந்துள்ளனர். ஏன்சீன விமானங்களில் அவர்கள் வரவில்லை என்று ஓரன்பர் கேட்கின்றார். சீனத்திலே விமானங்கள் நிச்சயம் இருக்க வேண்டும். என்றாலும் முன்னர் பாண்டுங் மகாநாட்டுக்குச் செல்லுகையிலும் அவர் ஒரு இந்திய விமானத்தில்தான் சென்றார் ஏன்?

சீன ரயில் பெட்டிகளைப் பார்த்து விட்டோம். சீன கப்பல்களும் முதல்தரமானவையாம். தங்கள் விமானங்களில் வராமல், இப்படி அந்நியர் விமானத்தில் பறப்பதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். சீன விஷயமே பெரிய புதிராகவே இருக்கிறதல்லவா?

* * *

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும் விண்ணுலகும் மண்ணுலகுமானார் போலும், பூதங்களாய புராணர் போலும் புகழ வளரொளியாய் நின்றார் போலும், பாதம் பரவப்படுவார் போலும் பக்தர்களுக்கின்பம் பயந்தார் போலும், ஏதங்களான கடிவார் போலும் இடைமருது மேவிய ஈசனாரே.

—திருநாவுக்கரசர்

திருவள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் சைவநாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று திருவள்ளுவர் குருபூசை நடாத்தப்படும்.

காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை சிவபூசை, கடவுளாராதனை, திருவள்ளுவர் மாலையோதல், மகேசுர பூசை ஆகியன நடைபெறும். பின்னர் மாலை 6-30 மணி முதல் சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. த. முத்துச்சுவாமிப்பிள்ளை உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

தேவை

எமது தயாரிப்புப் பொருள்களை விற்பனை செய்ய 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தேவை. தகுந்த சம்பளம் உண்டு. விண்ணப்பிக்கவும்.

ராஜா இன்டஸ்ட்ரீஸ், இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,

புன்னகை பூத்திடுங்கள்!

PARKER
SUPER Quink
ROYAL BLUE INK

கழுவக்கூடிய சூப்பர் குயிங்க் ரோயல் புளூ மை கொட்டுண்ட புடவைகளையும் துணிமணிகளையும் பொறுத்த கவலையே கொள்ளாதீர்கள். ஏனெனில் இந்த மை தான் பாடசாலைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த மை. காரணம் மை பட்ட உடைகளைக் கழுவி அலசியதும் கறைகள் மாயமாய் மறைந்த விடுகின்றன.

இது ஒரு
பார்க்கர் பேனா
கம்பனியின் உற்பத்தி
உலகளவில் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

வரி விளம்பரம்

இம்பீரியல் ரொவ்பி

இம்பீரியல் ரொவ்பி (புல்டோ) என்ற முத்திரை பொறித்த ரொவ்பியையே கேட்டு வாங்குங்கள். இம்பீரியல் ரொவ்பி சுவை, மணம் எல்லாவற்றிலும் தனிச்சிறப்பு வாய்ந்தது. சுகாதார முறையில் சிறுவர்கள் உட்பட எல்லோரும் விரும்பும் வகையில் நவீன முறையில் தயாரிக்கப்பட்டது இம்பீரியல் ரொவ்பி! இம்பீரியல் ரொவ்பி, வி. றெஜினோல்ட், இளவாலை. 4

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஜாரில் பிரதான இடத்தில் கடை, கிட்டங்கி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மேல்பார்த்து 'ஈழநாடு'. 2

அச்சுவேலி தபாற்கந்தோரிலிருந்து முக்கால்கட்டைக்கப்பால் பத்தமேனியில் றிபோமேற்றறிக்கருகாமையில் தோட்டத்துக்கு உகந்த 5¼ பரப்பு கலட்டி நிலம் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் விலை விபரம்பற்றி, உடையாமணல், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆ. வே. வேற்பிள்ளையுடன் தொடர்புகொள்ளவும். 3

பி. எஸ். ஏ. பன்ரம் EY 8351 தொடர்பிலக்க மோட்டார் சைக்கில் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

நியூட்டன் ரேடியோ சேவிஸ் 76, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 6

சகல தளபாடங்களுடன் தேநீர்க் கடை யாழ்ப்பாணத்தில் உண்டு. விபரத்திற்கு கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். நியூபெக்சர் பிறேமிங், 133, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 7

வீடு வளவு விற்பனைக்கு

மல்லாகம் ஆராச்சீமாவில் நவீனமுறையில் கட்டப்பட்ட புதிய வீடும் கிணறும் 8 பரப்பு நிலத்தில் மின்வசதியுடன் விற்பனைக்கு உண்டு. இ. சோமசுந்தரம், ஆராச்சீமா, மல்லாகம் என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 8

இலங்கையர் கைத்தொழிலை
ஆதரியுங்கள்
கை மார்க் அப்பளம்
(Bata)

சுத்தமாகவும், திறமையாகவும் தயாரிக்கப்படும் அப்பளத்தை என்றும் கேட்டுவாங்குங்கள், ஏக் விநியோகஸ்தர்கள்: மொகமட் அலிபாய் அன் கோ, ஸ்ரீஹரன் அன் கோ, யாழ்ப்பாணம். ஏஜண்ட்கள் தேவை. விபரங்களுக்கு: 65, சின்னக்கடை, யாழ்ப்பாணம், 5

தெல்லிப்பழை கிராமசபை: நியமனப்பத்திரங்கள் தாக்கல்

இடதுசாரியினர் மூவர் போட்டியின்றி தெரிவு

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை கிராமசபையின் 19 வட்டாரங்களுக்கான நியமனப்பத்திரங்களை இன்று யாழ்ப்பாணம் கச்சேரி ஓ. ஏ. யும் பதில் தேர்தல் அதிகாரியுமான திரு. ரி. எஸ். துரையப்பா ஏற்றுக்கொண்டார். 19 வட்டாரங்களில் 7 வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்கள். தற்போதய அங்கத்தவர்களில் தலைவரும், மற்றும் ஒருவரும் தான் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களை விட தற்போதய அங்கத்தவர்கள் நால்வர் போட்டியிடுகிறார்கள். போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டவர்களில் மூவர் இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள். போட்டியிடுகிறவர்களில் நால்வர் இடதுசாரி ஐக்கிய முன்னணி ரிக்கற்றுடன் போட்டியிடுகிறார்கள். 2-ம் வட்டாரத்தில் போட்டியிடவிருந்த திரு. சி. வயிரவனின் நியமனப்பத்திரம் சம்பந்தமாக ஒழுங்குப் பிரச்னை கிளப்பப்பட்டு அதை தேர்தல் அதிகாரி ஏற்றமையால் வயிரவன் போட்டியிடவில்லை.

இன்று நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்தவர்களின் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்

திரு. விசுவலிங்கம் நாகரத்தினம் (தராசு), திரு. அருணானந்தம் கிக்கிளார் (தற்போதய அங்கத்தவர்-சைக்கிள்), திரு. யோசேப்பிலிப் இராசநாயகம் (மூக்குக் கண்ணாடி).

2-ம் வட்டாரம்

திரு. அந்தோனி மார்க் (தராசு), திரு. அரியார் ஆசீர்வாதம் (சைக்கிள்).

3-ம் வட்டாரம்

திரு. நல்லையா சுப்பிரமணியம் (தற்போதய அங்கத்தவர்-சேவல்), திரு. இளையகுட்டி நரசிங்கம் (சைக்கிள்)

4-ம் வட்டாரம்

திரு. முத்தார் நடுவிலான் (சைக்கிள்), திரு. இராசதுரை பொன்னு (தராசு)

5-ம் வட்டாரம்

திரு. சங்கரப்பிள்ளை செல்லத்துரை (போட்டியில்லை).

6-ம் வட்டாரம்

திரு. திருவருள் துரைராஜசிங்கம் (சைக்கிள்), திரு. வன்னியசிங்கம் விசுவநாதர் (தற்போதய அங்கத்தவர்-சேவல்).

7-ம் வட்டாரம்

திரு. அப்புத்துரை வயிரமுத்து (போட்டியில்லை).

8-ம் வட்டாரம்

திரு. கிருஷ்ணர் இராசா (தற்போதய அங்கத்தவர்-திறப்பு-இடதுசாரி), திரு. சுந்தரமூர்த்தி நன்னிக்குட்டி (சேவல்).

9-ம் வட்டாரம்

திரு. அந்தோனி மரியதாசன் (இடதுசாரி-போட்டியில்லை).

10-ம் வட்டாரம்

திரு. முருகர் நாகமணி (இடதுசாரி-போட்டியில்லை)

11-ம் வட்டாரம்

திரு- செல்லையா செல்வராசா (தராசு), திரு. திருமேனி செல்லத்துரை (சைக்கிள்).

12-ம் வட்டாரம்

திரு. செல்லப்பா எட்வேட் குணரட்ணம் (திறப்பு-இடதுசாரி). திரு. இளையவல நகேந்திரம் (தராசு), திரு. கிருஷ்ணபிள்ளை கனகசபை (சைக்கிள்)

13-ம் வட்டாரம்

வழக்கறிஞர் திரு. மயில்வாகனம் சிதம்பரநாதன் (தற்போதய அங்கத்தவர்).

14-ம் வட்டாரம்

திரு. தமியாம்பிள்ளை மசிலாமணி (இடதுசாரி-திறப்பு) திரு. சண்முகம் செல்வராசா (சைக்கிள்) திரு. கந்தன் வேலன் (சூரியன்).

15-ம் வட்டாரம்

திரு. சின்னன் கணபதி (இடதுசாரி-போட்டியில்லை

16-ம் வட்டாரம்

திரு. தம்பு செல்வரட்ணம் (தற்போதய தலைவர்).

17-ம் வட்டாரம்

திரு. சிற்றம்பலம் சுந்தரம் (சைக்கிள்) திரு. எல்லுப்போலை வைரமுத்து (திறப்பு-இடதுசாரி)

18-ம் வட்டாரம்

திரு. கதிர்காமு கந்தையா (தராசு), திரு. இராசரத்தினம் பிறைசூடி (சைக்கிள்).

9-ம் வட்டாரம்

திரு. கதிரவேலு பெரியார் (சைக்கிள்), திரு. வயிரவி செல்லத்துரை (றேடியோ).

"செயல்படாத ஆயச்சேவைபற்றி விசாரணை செய்க!"

யாழ்ப்பாணம், வெள்ளி

நயினாதீவு கிராமச்சங்கமும் புங்குடுதீவு கிராமச்சங்கமும் களுதைப்பிட்டி இறங்குதுறையில் ஆயச்சேவை என்ற பெயரில் பிரயாணிகளிடம் தலா 5 சதம் வாங்கப்படுவதாகவும், வேறு பொருட்களுக்கு தாங்கள் விரும்பிய கட்டணம் வாங்குவதாகவும் இது மக்கள் நன்மையைக் கருதி செய்யப்படாமல் இருப்பதாகவும் இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் நயினாதீவு மக்கள் கோரியுள்ளனர்.

களுதைப்பிட்டி இறங்குதுறையில் பிரயாணிகளிடமிருந்து பணம் அறவிட்ட போதிலும் அவர்களுக்கு போக்குவரத்து வசதி எதுவும் செய்யப்படவில்லை என்றும், செயல்படாத மீன்பிடி வள்ளம் ஒன்று சம்பிரதாயத்திற்காக வைக்கப்பட்டிருப்பதாயும் அந்த மகஜரில் மேலும் புகார் கூறப்பட்டுள்ளது. இதனால் நயினாதீவு மக்கள் மட்டுமல்லாமல் வெளியிடங்களில் இருந்து வரும் இந்து பௌத்த யாத்திரிகர்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

"நயினாதீவு-புங்குடுதீவு கிராமச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து புங்குடுதீவில் உள்ள களுதைப்பிட்டித் துறைமுகத்தில் ஆயம் என்ற பெயரினால் மேற்படி துறைமுகத்தால், சென்ற இரண்டரை வருடங்களாகப் பிரயாணம் செய்யும் மக்களிடம் தலா 5 சத வீதமும், ஏனைய உப பொருட்களுக்கு விரும்பிய கட்டணமும் பெறுகின்றனர். ஆயச்சேவை என்ற பெயருக்கு அமைய பிரயாணிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் எதுவும் அளிக்கப்படவில்லை. இதன் மத்தியில் செயல்படாத மீன்பிடி வள்ளம் ஒன்று சம்பிரதாயத்திற்காக வைத்திருக்கிறார்கள். இதனால் இவ்வூர் மக்கள் மட்டுமன்றி இங்கு இருக்கும் புண்ணிய ஸ்தலங்களாகிய இந்து, பௌத்த ஆலயங்களுக்கு வழிபட வரும் லட்சக்கணக்கான இந்து, பௌத்த யாத்திரிகர்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் நயினாதீவுக்குவரும் மக்கள் மனதில், 'நயினாதீவுக்குப் போய் வருவதாக இருந்தால், ஐந்து சதம் பலவந்தமாகக் கொடுத்துத்தான் போயாக வேண்டும்' என்ற எண்ணம் உருவாகிவிட்டது. ஆகவே தங்களிடம் வேண்டுவது யாதெனில் நயினாதீவு மக்களையும் ஏனைய மக்களையும் கஷ்டத்துக்குள்ளாக்காது இது விஷயத்தில் ஆக்கபூர்வமான விசாரணை செய்வதோடு, மக்களை இக்கட்டான நிலையிலிருந்து விடுவிப்பீர்களென்பதேதான்."

கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

குருநாகல் சென். ஆன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையே இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், சென் ஆன்ஸ் கோஷ்டி முதல் இனிங்ஸில் 182 ரன்கள் எடுத்து அவுட்டானது. எஸ். பெரேரா 70 ரன்கள் எடுத்தார். ஜோதிலிங்கம் 67 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 6 விக்கெட் நஷ்டத்திற்கு 248 ரன்கள் எடுத்தது.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 90 ரன்கள் எடுத்து அவுட்டானது.

ஏ. ஷெரீப் 25 ரன்கள் எடுத்தார். சிவஜோதி 20 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென் பெட்ரிக்ஸ் கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யூனியன் கல்லூரி 43 ரன்கள் எடுத்து அவுட்டானது.

தெய்வேந்திரன் 10 ரன்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சண்முகராஜா 19 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளையும் அண்டன் 13 விக்கெட்டுகளுக்கு 4விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

சென் பெட்ரிக்ஸ் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 92 ரன்களையும் எடுத்தது.

ஹார்ட்லிக் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹார்ட்லிக் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 240 ரன்கள் எடுத்தது. நடராஜசுந்தரம் 120 ரன்கள் எடுத்தார்.

அடுத்த ஐந்தாண்டுத்திட்டத்தில் சேதுசமுத்திரவேலை பூர்த்தி

கொழும்புத் துறைமுகம் வராமலே கப்பல்கள் செல்ல முடியும்

சென்னை, பிப் 28

மன்னார்குடியையும் பாக ஜலசந்தியையும் இணைக்கும் சேது சமுத்திரத் திட்டத்திற்கான நிலங்களை சென்னை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்துவருகிறது என முதன்மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் அறிவித்தார்.

மேற்கேயிருந்து கிழக்கே செல்லும் பெரிய கப்பல்களும் இத்திட்டத்தின்மூலம் கொழும்புத்துறைமுகத்துக்குச்செல்ல வேண்டியதில்லை என அவர் கூறினர்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இது பூர்த்தியடையும் என கூறிய திரு. பக்தவத்சலம் சேதுசமுத்திரம் போக்குவரத்தின்மூலம் கப்பல்களுக்கு 200 சதவிகித எரிபொருள் மிச்சப்படும் என்றும் கூறினர்.

தபாற் பைகள் குவிகின்றன!

கொழும்பு, வெள்ளி

கொழும்பு, பெரியதபாற் கந்தோரில் மாகாணங்களிலிருந்து வரும் தபாற்பைகள் குவிந்து கிடக்கின்றன. புகையிரதத்தில் தபாற் பைகளை ஏற்றி இறக்கும் போட்டர்களும் பியோன்களும் தொடர்ந்து நாலாவது நாளாக வேலைநிறுத்தம் செய்துவருவதே இதற்குக் காரணமாகும்.

இவ்விதம் தபாற்பைகள் குவிந்துகிடந்த போதிலும் அரசாங்கம் அமைதியாக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும் அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்க செயலாளர் தெரிவித்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்

பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்

அயூப்-ஆர்ச்பிஷப் சந்திப்பு: கிறிஸ்தவர் வெளியேற்றம் குறித்து பேச்சு

கராச்சி பிப். 28

டாக்டர் ஆர்ச் பிஷப் வணபிதா எல் கிரேனர் இன்று கராச்சியில் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானைச் சந்தித்து கிழக்கு பாகிஸ்தானிலிருந்து கிறிஸ்தவர்கள் வெளியேறிவிடுவது குறித்து பேசினர்.

50,000 முதல் 80,000 வரையான கிறிஸ்தவர்கள் இந்தியாவுக்குள் வந்திருப்பதாயும் இன்னும் பலர் வந்துகொண்டிருப்பதாயும் கிறிஸ்தவபாதிரிகளிடமிருந்து உலகதிருச்சபைக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கிழக்கு பாகிஸ்தானில் மக்களின் வீடுகளுக்குத் தீவைக்கப்பட்டதாயும் பயிர்கள் அழிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

கிறிஸ்தவ மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பளிக்க உத்தரவாதமளிக்குமாறு தாம் கிழக்குப் பாகிஸ்தான் கவர்னரைக் கேட்டிருப்பதாயும் ஜனாதிபதி அயூப் ஆர்ச் பிஷப்பிடம் கூறினர்.

இந்திய விமானம்பற்றி விளக்கம்

புதுடில்லி, பெப். 28

அண்மையில் இலங்கை, ரத்மலானை விமான நிலயத்தில் எதுவித அறிவித்தலுமின்றி வந்திறங்கிய 'விக்றண்ட்' என்னும் இந்திய கடற்படை விமானம் பயிற்சியின்போது திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே வந்து இறங்கியதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. விமானம் இறங்க வேண்டியுள்ளதென்று அடையாளம் கொடுக்கும் கருவி பழுதடைந்ததாலேயே இலங்கை அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று இறங்க முடியவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை தெரிவிக்கிறது.

வள்ளுவர் விழா

கொழும்பு, சனி

இன்றும் நாளையும் வெள்ளவத்தை சைவமங்கையர்கழகத்தில் வள்ளுவர் விழா நடைபெறும். கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் சார்பாக இந்த விழா நடைபெறுகிறது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 8ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்-1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.